**OPEN ACCESS**

Manuscript ID:
TAM-050420213870

Volume: 5

Issue: 4

Month: April

Year: 2021

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 15.12.2020

Accepted: 16.03.2021

Published: 01.04.2021

Citation:
Thangaraj, C. "Shiva's Heroic Deeds on Atta Veerattana Places." *Shanlax International Journal of Tamil Research,* vol. 5, no. 4, 2021, pp. 43–50.

DOI:
https://doi.org/10.34293/tamil.v5i4.3870

*Corresponding Author:
murugesapandian2011@gmail.com

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Shiva's Heroic Deeds on Atta Veerattana Places

**C. Thangaraj**
*Part-time Research Scholar, Kandasamy Kander College*
*Paramathi-Vellore, Namakkalal, Tamil Nadu, India*
https://orcid.org/0000-0002-8922-2704

**Abstract** - Literature to the development of Tamil literature is immense. The Panniruthirumuraigal, which are prominent in devotional literature, are the revisions of Lord Shiva; Not only the specialties, but also the various special ideas about the deeds performed by Lord Shiva at different times in these sites. Among them are the heroic deeds of Lord Shiva in eight places including Thirukandiyur, Tirukovalur, Travancore, Tirupariyalur, Thiruvirkudi, Thiruvalur, Thirukurukkai, Thirukkadavur, which are revered as eight heroic Saiva holy places told in the Tamil tradition. According to the Tamil tradition, Brahman, Imayan, Andagan, Kayamugan, Dakkan, Chalandaran, Manmadhan and Tripura Asuras destroyed the arrogance of Enmar through the heroic deeds of Lord Shiva. It is revered as the card heroism as the act of heroism of Lord Shiva manifested in these places. Let me inform you that this article is based on comments taken from texts that have appeared in the Panniruthirumuraigal.

**Key Words:** God heroism, devotional literature, Panniruthirumuraigal, Saiva holy places, heroic deeds, Lord Shiva, Tamil Bakthi Litrature.

**References**

1. Karthigayan, P. (2016). *History of Medical and Spiritual Sciences of Siddhas of Tamil Nadu*. Notion Press, P. 388.
2. Meena, V., Temples in South India (1st Ed.), Harikumar Arts, Kanniyakumari, P.37. 1974.
3. Jagadisa Ayyar, P.V. (1920). *South Indian Shrines: Illustrated*. Madras Times Printing and Pub. Co., P. 281.
4. (2010). Tourist Guide to Tamil Nadu. Sura Books, P. 64, ISBN 978-81-7478-177-2.
5. Venkataraman & Sekar. (2019). *Temples of Forgotten Glory - A Wide Angle Exposition*, Notion Press, P. 185.

# அட்ட வீரட்டானத் தலங்களில் சிவனின் வீரச்செயல்கள்

***கோ. தங்கராசு***
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
கந்தசாமி கண்டர் கல்லூரி, பரமத்தி

***ஆய்வுச் சுருக்கம்***

*தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு பக்தி இலக்கியத்தின் பங்களிப்பு பெரியது. பக்தி இலக்கியத்தில் முக்கிய இடம்பெற்றுள்ள பன்னிருதிருமுறைகள் சிவபெருமான் வீற்றுள்ள திருதலங்களின் சிறப்புகளைப் பற்றி மட்டும் வெளிப்படுத்தாமல், அத் தலங்களில் பல்வேறு காலங்களில் சிவபெருமான் புரிந்த திருவீரச் செயல்கள் பற்றிய கருத்துகள் இடம் பெற்றுள்ளன. அவற்றுள் வீர சைவ திருத்தலங்கள் என போற்றப்படும் திருக்கண்டியூர், திருக்கோவலூர், திருவதிகை, திருப்பறியலூர், திருவிற்குடி, திருவழுவூர், திருக்குறுக்கை, திருக்கடவூர் உள்ளிட்ட எட்டு தலங்களில் சிவபெருமானின் வீரச் செயல்கள் மூலம் பிரமன், இமயன், அந்தகன், கயமுகன், தக்கன், சலந்தரன், மன்மதன், திரிபுர அசுரர்கள் ஆகிய எண்மரின் ஆணவத்தை அழித்த தலங்களாகச் சொல்லப்படுகின்றன. இந்தத் தலங்களில் சிவபெருமானின் வீரம் என்ற செயல் வெளிப்பட்டதால் அட்ட வீரட்டம் என்று போற்றப்படுகிறது. இக்கட்டுரை பன்னிரு திருமுறைகளில் இடம் பெற்றுள்ள நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட கருத்துக்களில் அடிப்படையில் அமைந்துள்ளது.*

***முக்கியச் சொற்கள்***: *அட்ட வீரட்டம், பக்தி இலக்கியம், பன்னிருத்திருமுறைகள், வீர சைவ திருத்தலங்கள், வீரச் செயல்கள், சிவபெருமான்*

## முன்னுரை

இறைவனின் மேன்மையினை வெளிப்படுத்துவற்காக பல்வேறு இடங்களில் வெவ்வேறு கால கட்டத்தில் சிவபெருமான் நடத்திய திருவிளையாடல்கள் எண்ணில் அடங்காதவை. சிவ ஆலயங்கள் அமைவிடம், நிகழ்த்திய திருவிளையாடல்கள் மற்றும் செயல்களின் அடிப்படையில் பஞ்சபூதத்தலங்கள், சப்ததலங்கள், தேவாரத்தலங்கள், அட்ட வீரட்டானத் தலங்கள் எனப் பதினான்கும் மேற்பட்ட துணைப் பகுப்புகளாக பகுக்கப்பட்டு உள்ளன. அட்ட வீரட்டான சிவதலங்கள் என போற்றப்படும் திருக்கண்டியூர், திருக்கோவலூர், திருவதிகை, திருப்பறியலூர், திருவிற்குடி, திருவழுவூர், திருக்குறுக்கை, திருக்கடவுர் உள்ளிட்ட எண் தலங்களில் சிவன் மேற்கொண்ட திருவிளையாடல்கள் முக்கியமானவை. அட்ட வீரட்டானம் என்பது சிவபிரானுடைய வீரத் திருவிளையாடல்கள் இடம் பெற்ற எட்டுத் தலங்களைக் குறிப்பிடப் பயன்படும் சொல்லாடலாகும். வீரச்செயல்கள் விளங்கிய இடங்களிலுள்ள திருத்தலங்களை வீரட்டானத்தலங்கள் என்று போற்றுவர். பகைவர்களின் வீரத்தை அட்டு ஆன இடம் என்ற வகையிலும், தன் வீரத்தால் அட்டு ஆன இடம் என்ற வகையிலும் வீரட்டானம் என்னும் சொல் அமைந்தது. இவை எட்டுத் தலங்களாதலால் அட்ட வீரட்டானம் என்று அழைக்கப்படுகிறது. இந்த அட்ட வீரட்டான சிவத்தலங்களை ஒரு தனிப்பாடலானது

**“புமன் சிரங்கண்டி அந்தகன் கோவல் புரம் அதிகை**
**மாமன் பறியல் சலந்தரன் விற்குடி மாவழுவுர்**
**காமன் குறுக்கை யமன் கடவுர் இந்தக்காசினியல்**
**தேமன்னு கொன்றையும் திங்களும் சூடிதன் சேவகமே’’**

என்று பாடுகிறது.

இந்த எட்டு சிவதலங்களும் சிவபெருமான் பிரமன், இமயன், அந்தகன், கயமுகன், தக்கன், சலந்தரன், மன்மதன், திரிபுர அசுரர்கள் ஆகிய எண்மரின் ஆணவத்தை அழித்த தலங்களாக தமிழ் மரபில் சொல்லப்படுகின்றன. எட்டு சிவதலங்களும் ஆணவத்தை அழித்தது என்ற ஒத்த செயலின் அடிப்படையில் பிரிவு செய்யப்பட்டுள்ளதால் இந்தத் தலங்கள் அட்டவீரட்டானத் தலங்கள் என அழைக்கப்படுகின்றன.

**திருக்கோவிலூர் (கீழையூர்). அந்தாசுரனை அழித்த இடம்**

நடுநாட்டுத்தலம் 22 இல், 11ஆவது திருத்தலமான திருக்கோவிலூர் (கீழையூர்) தென் பெண்ணை நதிக்கரை ஓரத்தில் அமைந்துள்ள அட்ட வீரட்டத் தலங்களுள் ஒன்றாகும். உலக உயிரையெல்லாம் துன்புறுத்தி வந்த அந்தகனைத் தனது சக்கராயுதத்தால் ஈசன் அழித்த தலம் ஆகும். அந்தகாசுரன் எனும் அசுரனுக்கும் சிவ பெருமானுக்கும் போர் நடைபெறும்பொழுது அசுரனின் குருதியிலிருந்து அசுரர்கள் தோன்றிக் கொண்டிருந்தநிலையில், அவர்களைத் தடுப்பதற்காக சிவபெருமான் 64 பைரவர்களை உருவாக்கி, அறியாமை எனும் இருளான அந்தாசுரனை அழித்துச் சிவபெருமான் வீரட்டேசுவரராக மெய்ஞானத்தினை அருளிய தலம். புராண காலத்தில் அந்தகபுரம் என்று அழைக்கப்பட்டு வந்த நகரமே திருக்கோவிலூர் என்று அழைக்கப்படும் கோவில் நகர் வீரட்டனம் ஆகும். திருக்கோயிலூர் வீரட்டேசுவரர் கோவில் அப்பர், சுந்தரர் மற்றும் சம்பந்தர் ஆகிய மூவராலும் தேவாரம் பாடல் பெற்ற சிவ தலமாகும். இத்தலத்தில் பாரியின் மகள்கள் அங்கவை மற்றும் சங்கவை இருவருக்கும் அவ்வையும், கபிலரும் திருமணம் செய்து வைத்ததாகப் புராண வரலாறு. இறைவன் "அறியாமையான அந்தகாசுரனை" "ஞானம்" என்ற "சூலம்" கொண்டு அழித்தான் என்று பத்தாம் திருமுறையான திருமந்திரத்தில் திருமூலர் கீழ்கண்ட பாடலில் பாடியுள்ளார்.

> **"கருத்துறை அந்தகன் தன்போல் அசுரன்**
> **வரத்தின் உலகத்துயிர்களை எல்லாம்**
> **வருத்தஞ் செய்தா னென்று வானவர் வேண்டக்**
> **குருத்துயர் சூலங்கை கொண்டு கொன்றானே"**
> **(தி.ம.339).**

திருஞானசம்மந்தர் துன்பம், முதுமை, மரணம் என யாவும் சூழ்ந்து வந்து நாள் தோறும் யாக்கையானது அழியக்கூடியது. எனவே முக்தியைக் காட்டும் நெறியுடைய திருக்கோவிலூர் வீரட்டானத்தில் வீற்றிருக்கும் பெருமானை சார்ந்து நற்கதியடைக என்று தனது பதிகத்தில் திருக்கோவிலூர் (கீழையூர்) விரட்டானம் பற்றி குறிப்பிடுகிறார்.

> **"கேடுமூப்புச் சாக்காடு கெழுமிவந்து நாள்தொறும்**
> **ஆடுபோல நரைகளா யாக்கைபோக்கது அன்றியும்**
> **கூடிநின்று பைம்பொழில் குழகன் கோவலூர்தனுள்**
> **வீடுகாட்டு நெறியினான் வீரட்டானம்**
> **சேர்துமே" ( தி.மு.2,ப.236,பா.6)**

**திருப்பறியலூர் (கீழப்பரசலூர்) (தக்கனை அழித்த தலம்)**

தேவாரப்பாடல் பாடப்பெற்று, காவிரி தென்கரையில் அமைந்துள்ள 41வது சிவத்தலமாக போற்றப்பெறும் இத்தலத்தில். தேவர்களுக்கு ஏற்பட்ட பாவத்தை தண்டனை மூலம் பறித்ததால் "பறியலூர்" என்றும், தக்கன் யாகம் செய்த தலமாதலின் தசபுரம் என்றும் பெயர் பெற்ற வீரட்டேசுவரர் தலம். சிவ பெருமானை மதியாமல் தட்சன் நடத்திய யாகத்தையும், தட்சனையும் அழித்த தலம். சிவ பெருமானின் மனைவியான தாட்சாயினையினைத் தந்தை தட்சன் மிகச்சிறந்த சிவ பக்தன். அவனுக்கு வரம் அளித்த சிவன் என்றுகூட மதியாமல் அவருக்குறிய அவிர்பாகத்தையும் தான் நடத்தும் யாகத்தில் தராமல் ஆணவத்துடன் நடந்து கொண்டான். தட்சன் நடத்தும் யாகத்திற்குத் தாட்சாயினி செல்ல ஈசன் அனுமதி கொடுக்கவில்லை. அழையாமல்

யாகத்திற்குச் சென்ற தாட்சாயினையை மகள் என்றும் பாரமல் அவமரியாதை செய்தான் தட்சன். திரும்பிச் சென்று ஈசனை பார்க்க மனம் வராத தாட்சாயினியாக குண்டத்தில் கொழுந்துவிட்டு எரியும் தீயில் வீழ்ந்து தன்னை மாய்த்துக்கொண்டாள். கோபமுற்ற ஈசன் வீரபத்திரரை அனுப்பி தட்சன் நடத்தும் யாகத்தை அழித்ததுடன் தட்சன் தலையைக் கொய்து அவனைத் தண்டித்த தலம் திருப்பறியலூர் தன்னை மதிக்காமல் தட்சன் நடத்திய அந்த யாகத்தில் கலந்துகொண்ட தேவாதி தேவர்களை எல்லாம் சிவபெருமான் தண்டித்தார்.

**"கொலையிற் பிழைத்த பிரசா பதியைத்**
**தலையத் தடிந்திட்டுத் தானங்கியிட்டு**
**நிலையுல குக்கிவன் வேண்டுமென் றெண்ணித்**
**தலையைப்பரிந்திட்டு சந்தி செய்தானே"**
***(தி.ம.340).***

திருப்பறியலூரில் குடி கொண்டுள்ள ஈசன் பிறப்பின் தன்மையில்லாதவன். அவன் ஏனையோரின் பிறவிக்கும் இறப்புக்கும் தோற்றமும் முடிவும் ஆகிச் செல்லும் நிலையில் ஒளிவண்ணமாய் இருந்து கலந்து செறிந்தவன் என்பதைச் சம்மந்தர் தேவாரத்தில்

**"பிறப்பதி யில்லான் பிறப்பார் பிறப்புச்**
**செறப்பாதி யந்தம் செலச்செய்யும் தேசன்**
**சிறப்பாடு உடையார் திருப்பறி யலூரில்**
**விறற்பா ரிடம்சூழ் வீரட்டத் தானே"**
***(தி.மு.1,ப.134,பா.1)***

என்று பாடியுள்ளார்.

**திருக்கண்டியூர். (நான்முகன் தலையை கொய்த இடம்)**

அட்ட வீரட்டானத்தலங்களின் வரிசையில் முதல் இடம் பெற்றள்ள தலம் திருக்கண்டியூரில் உள்ள பிரமரக்கண்டீசுவரர் கோவில் ஆகும். சிவபிரான் படைப்பின் முதல்வன் தானே என்று அகந்தையுற்றிருந்த பிரமனுடைய தலையைக் கொய்து செருக்கழித்த திருத்தலம் ஆகும். பிரமனின் ஐந்து சிரத்தைகளுள் ஒன்றைத் தம் சூலத்தால் கண்டனம் செய்த (கொய்த) காரணத்தால் கண்டனபுரம் - கண்டியூர் எனப்பெயர் பெற்றது. பிரமன் சிரம் கொய்த பின், அவன் வேண்டிய ஐந்து முகங்களின் அழகினைச் சதுர் முகங்களில் (நான்கு முகங்களில்) இறைவன் அருளிச்செய்ய, பிரமன் பெற்றுப் பேறடைந்தான் என்பது இத்தலத்தின் வரலாறு ஆகும். இத்தலத்தில் சிவ பெருமன் பிரமசிரக்கண்டீசுவரர் என்ற திருநாமத்துடன் குடிகொண்டுள்ளார். தேவாரப் பாடல் பெற்ற தலங்களில் காவிரி தென்கரைத் தலங்களில் அமைந்துள்ள 12வது சிவத்தலமாகும். சாதாதாப முனிவர் பிரதோசத்தில் காளத்தி சென்று தரிசனம் செய்து வந்தார். ஒரு முறை கண்டியூர் வந்த போது காளத்திக்கு நேரத்தில் செல்ல முடியாமற்போயிற்று. அப்போது இறைவன் சாதாதாப முனிவருக்கு காளத்தி தரிசனத்தை இத்தலத்திலேயே காட்டியருளினார் என்பது வரலாறு. மேலும் சாதாதாப முனிவருக்காக இறைவனால் வில்வமரம் கயிலையிலிருந்து கொண்டு வரப்பட்டதால் இத்தலத்திற்கு" ஆதிவில்வாரள்யம்" என்ற மற்றொரு பெயரும் பெற்றுள்ளது. இத்தலம் சப்த (ஏழு) தலங்களுள்ளும் ஒன்றாக விளங்குகிறது. இத்தலத்தில் பிரம்மா தனது இரு கைகளாலும் பூமாலை ஏந்தி இரு கைகளாளும் இறைவனை வணங்கும் உருவம் அழகுடையது. இத்தலத்தில் பிரமனுக்கு என தனி கோவில் உள்ளது. பிரமனின் சிரம் கொய்வதற்காக இறைவன் கொண்ட வடுகக்கோலம் பிரமன் சந்நிதிக்குச் செல்லும் வாயிலில் சிறிய சிலா ரூபமாக உள்ளது. நான்முகனின் தலையைக் கொய்த தத்துவம் உணர்த்திய தலம் என்பதை திருமூலர்" தனது திருமந்திரத்தில்

**"எங்கும் பரந்தும் இருநிலம் தாங்கியும்**
**தங்கும் படித்து அவண் தாள் உணர் தேவர்கள்**
**பொங்கும் சினத்துள் அயன்தலை முன்அற**
**அங்கு அச்சுதனை உதிரம் கொண்டானே"**
***( தி.ம.341).***

பிரமனின் ஐந்தாவது சிரம் ஆணவ நிலை மேலிட்டு நிற்றலும்,அது பொய்த்தன்மை உடையது. படைத்தல் தொழில் மேவும் பிரமனைப் படைக்கும் ஆற்றலினை ஈசனே உடையவர் என்பதை திருஞான சம்மந்தர் திருக்கண்டியூர் வீரட்டானம் பற்றி மூன்றாம் திருமுறையில் கீழ்கண்டவாறு பாடியுள்ளார்.

**"இயலுமாறு எனக்கு இயம்பு மின்இறை**
**வன்னுமாய்நிறை செய்கையைக்**
**கயல்நெடுங்கண்ணி னார்கள் தம்பொலி**
**கண்டியுர்உறை வீரட்டன்**
**புயல்பொழிந்திழி வானுளோர்களுக்காக**
**அன்றயன் பொய்ச்சிரம்**
**அயல்நகவ்வது அரிந்து மற்றதில்**
**ஊனுகந்த அருத்தியே"**
**(தி.மு.3,ப.296,பா.6).**

### திருவிற்குடி. (சலந்தாசுரனை வதம் செய்த இடம்)

தேவாரப்பாடல் பாடப்பெற்று, காவிரி தென்கரையில் அமைந்துள்ள 74 ஆவது சிவத்தலமாக போற்றப்பெறும் இத்தலத்தில். சலந்தாசுரன் என்பவனைச் சக்கரத்தால் சிவபெருமான் அழித்தால் இத்தலம் அட்ட வீரட்டானத் தலங்களில் ஒன்றாகப் போற்றப்படுகிறது. பிரம்மாவிடம் சாகா வரம் கேட்ட சலந்தாசுரனுக்கு வரம் மறுக்கப்பட்டது. அதற்குச் சலந்தாசுரன் தர்மபத்தினியான தன் மனைவி பிருந்தை எப்போது என் மனதளவில் கெடுகிறாளோ அப்போழுது எனக்கு அழிவு வரட்டும் என்ற வரம் வாங்கிவிட்டான். வரம் பெற்ற சலந்தாசுரன் சிவனையே அழிக்கச் சென்றான். சிவன் அந்தரணர் வேடமிட்டு தரையில் தன் காலால் சக்கரவடிவில் ஒரு வட்டம் போட்டு அதை எடுத்து உன் தலையில் வை அது உன்னை அழிக்கும் என்றார். ஆணவம் கொண்ட சலந்தாசுரன் என் மனைவியின் கற்பின் திறத்தால் தனக்கு அழிவு நேராது என்று தெரிவித்தார். இதைக் கேட்ட சிவ பெருமான் திருமாலை அழைத்து சலந்தாசுரன் போல் வேடமிட்டு அவன் மனைவி பிருந்தையின் முன் செல்லும்படி கூறினார். அவ்வாறே திருமாலும் சலந்தாசுரன் போல் வேடமிட்டு பிருந்தையின் முன் நின்ற போது பிருந்தை தனது முன் நிற்பவர் தனது கணவர் என்று எண்ணி வீட்டிற்குள் அழைத்தாள். மாற்றானை தன் கணவர் என்று நினைத்தால்அவளது மனம்களங்கமடைந்தது. அந்த நேரத்தில் சக்கரத்தை அசுரன் எடுத்து தலையில் வைக்க அவன் கழுத்தை சக்கரம் துண்டித்துவிடுகிறது. சலந்தாசுரனை வதம் செய்த இடம் என்பதால் இங்கு அமைந்துள்ள மூலவர் சலந்தராசுரவத மூர்த்தி எனப்பெயர் பெற்றுது. திருமூலர் திருமந்திரத்தில்

**"எங்கும் கலந்தும மென் உள்ளத்து எழுகின்ற**
**அஙக முதல்வன் அருமறை ஓதிபால்"**
**பொங்கும் சலந்தரன் போர் செய்ய நீர்மையின்**
**அங்கு விரல்குறித்த ஆழிசெய் தானே"**
**(தி.ம.342).**

### திருவதிகை. (முப்புரம் அழித்த இடம்)

இறைவன் தன் பக்கதர்களை மட்டும் அன்றி தன்னை வழிபடும் தேவர்கள், முனிவர்கள் ஆகியோரையும் அவ்வப்போது சோதிப்பதுண்டு. அவ்வாறு தேவர்களைச் சோதித்து வீரச்செயல் புரிந்ததன் ஆதாரமாக சிவபெருமானின் அட்ட வீரட்டானத் தலங்களில்" ஒன்றாகத் திகழ்கிறது திருவதிகை திருத்தலம். முப்புரத்தில் மூன்று அசுரர்களும் வாழ்ந்த பொன், வெள்ளி, இரும்பு கோட்டைகள் ஒரே இடத்தில் வந்து நிற்கவும் சரியாக இருந்த நிலையில் மூன்று அசுரர்களும் சிவபெருமானுடன் போர்புரிய வெளியில் வந்தார். சிவன் உலகமே நடுங்கும் படியாக தீப்பிழம்பு உருவாகி ஒரு நொடியில் அசுரர்களின் மூன்று கோட்டைகளும் (முப்புரம்) சாம்பலானது. சைவத்" தொண்டுக்கு உறைப்பான திருநாவுக்கரசரையும், ஆலால சுந்தரரையும் வழங்கியருளிய பெருமை மிகு தலமிதுவே. திருநாவுக்கரசர் முதன் முதலில் தேவாரப்பாடல் பாட ஆரம்பித்த தலம். சம்பந்தருக்கு இறைவன்

திருநடனம் காட்டிய தலம். அப்பரின் தமக்கையார் தன் தம்பி ஆகிய (அப்பர்)மருள் நீக்கியாரை நல்வழிப்படுத்துமாறு இறைவனை வேண்ட, இறைவன்"சூலை நோய் தந்து ஆட்கொள்வோம்" என்று பதிலுறைத்த பதி. அதிகைப்பிரான் அடிமலர் வீழ்ந்து வணங்கி, "ஆற்றேன்" என்று "கூற்றாயினவாறு" பதிகம் பாடிச்சூலை நீங்கப்பெற்ற அற்புதத்தலம்.

**"கூற்றாயின வாறு விலக்கலீர்**
**கொடுமைபல செய்தன நான் அறியேன்**
**ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்**
**பிரியாது வணங்குவன் எப்பொழுதும்**
**தோற்றாதென் வயிற்றின் அகம்படியே**
**குடரோடு துடக்கி முடக்கியிட**
**ஆற்றேன் அடியேன் அதிகைக்கெடில**
**வீரட்டானத்துறை அம்மானே"**
**(தி.மு.4,ப.1,பா.1).**

மூன்று புரங்களை அழித்தல் என்பது ஆணவம், கன்மம், மாயை என்ற மூன்றையும் அழித்தல் என்பதை பத்தாம் திருமுறை நூலான திருமந்திரத்தில் திருமூலர்

**"அப்பணி செஞ்சடை யாதி புராதனன்**
**முப்புரஞ் செற்றன னென்பர்கள் மூடர்கள்**
**முப்புரமாவது மும்மல காரியம்**
**அப்புரம் எய்தமை யாரறிவாரோ"**
**(தி.ம 343)**

என பாடியுள்ளார்.

**திருவழுவூர் (யானையின் தோலை உறித்தது)**

பிரளய காலத்தில் உலகெல்லாம் அழிந்தும் இவ்வுர் அழியாது வழுவின காரணத்தால் வழுவூர் என்றும், வழுவை என்பதற்கு யானை என்ற ஒரு பொருள் உண்டு என்பதால் யானையை உரித்த ஊர் என்ற வகையில் வழுவூர் என்றும் பெயர் பெற்றது என்ற கூற்றும் நிலவி வருகிறது. தாருகாவனத்து முனிவர்கள் தாமே தவ முனிவர்கள் எனவும், தாம் செய்யும் நற்கருமங்களே பலனைத்தரும். இதற்கு கடவுள் துணை தேவையில்லை எனவும் கருதி ஆணவம் கொண்டனர். இவர்களின் ஆணவத்தையும், கர்வத்தையும் அழிக்கும்பொருட்டு சிவபெருமான் திகம்பரராகத் திருமேனி கொண்டு, திருமால் பெண் வேடத்தில் மோகினியாக உடன் வர தாருகாவனத்தை அடைந்தனர். திகம்பரரின் பேரழகில் மயங்கிய முனிவர்களின் மனைவிகள் அவர் பின் தொடந்தனர். முனிவர்களும் பெண் உருவம் கொண்ட திருமால் அழகில் மயங்கி தம்வசம் இழந்தனர். அந்த வேளையில் ஆண் அழகனான திகம்பரர் ஆடியும் பாடியும் அங்கு வர, அவர் பின்னால் முனிவர்களின் மனைவியர்களும் பின் தொடர்வதைக் கண்ட முனிவர்கள் கோபமுற்று "நாங்கள் தவம் செய்யும் இடத்துக்கு ஏன் வந்தாய்?" என்று கேட்க, தானும் தன் மனைவியுடன் தவம் செய்ய வந்தாகக் கூறினார். அப்போது முனிவர்கள் இவள் உன் மனைவியா? மற்றவர்களை மயக்கித் திரியும் இவள் கற்புடையவளா என்று ஏளனம் பேசிய நிலையில் திகம்பரர் மன அடக்கம் இல்லாமல் என் பின்னர் சுற்றித்திரியும் உங்கள் மனைவியோடு வாழ்ந்து கொண்டுள்ளபோது என் மனைவியின் கற்பிற்குப் பங்கம் கற்பித்தல் முறையா என்று வினவினர். அப்போது கோபமுற்ற முனிவர்கள் தீய வேள்வி செய்து அதிலிருந்து பூதத்தை ஏவி திகம்பரரைக் கொன்றுவிட திட்டமிட்டு யாகத்தீயில் இருந்து மிகப்பெரிய யானையினை தோற்றுவித்து யோகத்திலிருந்த சிவனை வாயில் போட்டு விழுங்கிய நிலையில் உலகம் இருள்கொண்டது. சிவபெருமான் யானையின் வயிற்றில் வெப்பத்தை உருவாக்கி வயிற்றை கிழித்துக்கொண்டு வெளியேவந்து அதன் தோலை உரித்து அதைப் போர்வையாக போர்த்திக்கொண்டதால் அவரை கரி உரித்த பெருமான் என்று புகழ் பெற்றார் என்பதால் அட்ட வீரட்டான தலங்களில் ஒன்றாக இடம் பெற்றுள்ளது. இத்தலத்தைப் பற்றி திருமந்திரத்தில்

**"முத் தீக் கொளுவி முழங்கு எரி வேள்வியுள்**
**அத்தி உரி அரன் ஆவது அறிகிலர்**
**சக்தி கருதியது ஆம் பல தேவரும்**
**அத்தீறி னுள் எழுந்த தன்று கொலையே"**
**(தி.ம.344)**

என்று திருமூலரால் பாடப்பட்டுள்ளது.

**திருக்கடவூர் (இமயனை அழித்த வீரச் செயல் நடந்த இடம்)**

மூவரால் தேவாரப் பாடல் பெற்ற காவிரி தென்கரைத் தலங்களில் 47 ஆவது சிவதலமான இந்தத் தலத்தில் மார்க்கண்டேயனுக்காக இமயனை அழித்தால் அட்ட வீரட்டான தலங்களில் ஒன்றாககடவூர் போற்றப்படுகிறது. தனது ஆயுள் 16 வயதுடன் முடியும் ஆயுளை நீடிக்க சிவ பெருமானாள் மட்டுமே முடியும் என்ற நிலையில் மார்க்கண்டேயர் 107 சிவ தலங்களை வணங்கிய பின்னர் தனது ஆயுள் நெருங்கும் நாளில் 108 ஆவது தலமாகிய கடவூரை அடைகிறார். எமன் தன் பணியை முடிக்கும் பொருட்டுப் பாசக்கயிற்றை மார்கண்டேயர் மீது வீசுகிறார். எமனைக்கண்டு அச்சமுற்ற மார்கண்டேயர் தான் வழிபட்டுக் கொண்டிருந்த லிங்கத்தை ஆரத்தழுவிக்கொண்டார். எமனும் பாசக்கயிற்றை லிங்கத்தையும் சேர்த்து வீசினான். சிவபெருமான் தன்னுடைய பக்தனைக் காப்பாற்ற லிங்கத்திலிருந்து திரிசூலத்துடன் வெளிப்பட்டுக் காலனைச் சூலாயுதத்தால் கொன்று காலனுக்குக் காலனாக காலசம்கார மூர்த்தியாக விளங்கினார். பின்பு பிரம்மா, மகாவிஷ்ணு, பூதேவி ஆகியோரின் வேண்டுதலுக்கு இணங்கி எமனை உயிர்ப்பித்து அருள் புரிந்தார் என்று தல புராணம் கூறுகிறது. இது திருமந்திரத்தில் கீழ்கண்டவாறு இடம் பெற்றுள்ளது.

**"மூலத்துவாரத்து மூளும் ஒருவனை**
**மேலத்துவாரத்து மேலற நோக்கி முற்காலுற்று**
**காலனைக் காய்ந்தங்கி யோகமாய்**
**ஞாலக்கடவுர் நலமாய் இருந்ததே"**
**( தி.ம.345)**

**திருக்குறுக்கை வீரட்டம் (மன்மதனை எரித்த வீர செயல் நடந்தது)**

அட்ட வீரட்டான சிவதலங்களில் காவிரி வடகரையில் அமைந்து தேவாரப்பாடல் பெற்ற காமனை எரித்த தலம் ஆகும். சிவபெருமான் செய்த தியானத்தால் உலகம் வெப்பத்தால் அடைந்த பாதிப்பில் இருந்து காக்கும்பொருட்டுத் தேவர்கள் முருகப் பெருமானிடம் முறையிட்ட போது, முருகப் பெருமான் தந்தையின் தவத்தைக் கலைக்க மறுத்துவிட்டார். பின்னர் மன்மதனிடம் சென்று முறையிட, மன்மதன் நடக்கப்போவது தெரியாமல் தனது அறியாமையினால் தன்னிடம் உள்ள வில்லை எடுத்து சிவன்மீது கணைகளைத் தொடுத்தார். மன்மதன் ஏவிய கணையானது மலர்கணையாக மாறி சிவபெருமான் மீது விழுந்தது. அப்பொழுது சிவபெருமான் மன்மதன் இருக்கும் இடம் நோக்கி பார்வையினைச் செலுத்த, நெற்றிக்கண் மன்மதனைச் சுட்டு எரிக்க மன்மதன் சாம்பலானதாகவும், இதை அறிந்த இரதி தன் கணவரை உயிர்பிக்க சிவனிடம் வேண்டியபோது மன்மதன் உயிர் பெற்றதாகவும் வரலாறு. இங்கு குடி கொண்டுள்ள சிவபெருமானுக்கு" காமனை எரித்ததால்" காம தகன மூர்த்தி என்றும், "யோக நிலையில் இருந்ததால்" யோகேசுவரர் என்றும் பெயர்கள் உள்ளது.

**"இருந்த மனத்தை இசைய இருத்திப்**
**பொருந்தி இலிங்க வழியது போக்கி**
**திருத்திய இலிங்க வழியது போக்கி**
**அழுந்தவ யோகங்கொறுக்கை அமர்ந்ததே"**
**(தி.ம.346).**

**முடிவுரை**

வீரசைவத்தலங்களானதிருவதிகை, திருக்கடவூர், திருக்கொறுக்கை, திருக்கோவலூர், திருப்பறியலூர், வழுவூர், திருக்கண்டியூர், திருவிற்குடி என்ற அட்ட தலங்களில் சிவ பெருமான் ஆணவம், கன்மம், மாயை ஆகியவற்றை அழித்து மறக்கருணை காட்டிய இடங்கள் ஆகும்.

**துணை நூற்பட்டியல்**

1. கார்த்திகாயன், பி. (2016). *தமிழ்நாட்டின் சித்தர்களின் மருத்துவ மற்றும் ஆன்மீக அறிவியலின் வரலாறு*. நோஷன் பிரஸ். ப. 388.
2. மீனா, வி. (1974). *தென்னிந்திய கோயில்கள்* (முதலாம் பதிப்பு), ஹரிகுமார் ஆர்ட்ஸ், கன்னியாகுமரி, ப. 37.
3. ஜகதீச அய்யர், பி.வி. (1920) *தென்னிந்திய ஆலயங்கள்: விளக்கம்,* மெட்ராஸ் டைம்ஸ் பிரிண்டிங் பப். கோ., ப. 281.
4. (2010). *தமிழக சுற்றுலா வழிகாட்டி*. சுரா புத்தகங்கள், ப. 64.
5. வெங்கடராமன் & சேகர். (2019). *மறந்துபோன மகிமையான கோயில்கள் - ஒரு விரிந்த பார்வை*, நோஷன் பிரஸ், ப. 185.